அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 04/2016

எனது இலக்கம் : EST-1/CIRL/03/0001

அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2016.12.23

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சபைகளின் தலைவர்கள்

<u>பரிசுப் பொருட்கள் மற்றும் உதவிகளின் பட்டியல்கள்</u>

தாபன விதிக்கோவையின் II வது தொகுதியின் XLVII வது அத்தியாயத்தின் 3 வது உப பிரிவின் மீது தங்களின் கவனம் கோரப்படுகின்றது.

02. அப்பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் எந்தவிதமான பொருளையோ, பரிசுப் பொருட்களையோ அல்லது ஏனைய இலாபப் பயன்களையோ நேரடியாகவோ அல்லது வேறு ஒருவரின் மூலமாகவோ கையேற்பது, தாபன விதிக்கோவையின் முதலாவது உப அட்டவணையின் கீழான தவறு ஒன்றாவதுடன் இலஞ்ச ஊழல் சட்டத்தின் 19 (இ) பிரிவின் கீழ் 07 வருட சிறைத்தண்டனை மற்றும் ரூபா ஐயாயிரம் வரையான தண்டப்பணம் விதிக்கக்கூடிய குற்றமொன்றாகக் காட்டப்பட்டுள்ளது.

03. பண்டிக்கைக் காலங்களில் பிரத்தியேகக் கம்பனிகளினால் அரச உத்தியோகத்தர்களுக்கு பரிசுப் பொதிகள், பரிசுச் சீட்டுக்கள், விமானப் பயணச் சீட்டுக்கள், முற்கொடுப்பனவுடன் விடுதிகளில் தங்கும் வசதிகள் போன்ற பரிசுகளை அனுப்புவதற்கு வாய்ப்புள்ளது. ஆதலால் அவ்வாறான பரிசுகளை கையேற்பதைத் தவிர்க்குமாறு தங்கள் நிறுவனத்திலுள்ள சகல உத்தியோகத்தர்களையும் விழிப்புணர்வூட்டும்படி இத்தால் எடுத்துக் கூறுகின்றேன்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிறி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு